**விலை வீழ்ச்சியால் கேந்திப் பூக்களை பறிப்பதைத் தவிர்க்கும் விவசாயிகள்**

First Published : 29 Mar 2011 11:37:47 AM IST

காரியாபட்டி, மார்ச் 28: காரியாபட்டி பகுதியில் கேந்திப்பூ விளைச்சல் அதிகரிப்பால் விலை குறைந்து கிலோ ரூ.20-க்கு விற்பனையானது. விலை கட்டுப்படியாகாது என்பதால் விவசாயிகள் பூக்களை பறிக்காமல் விடுவதால் வீணாகி வருகின்றன.

காரியாபட்டி, அழகியநல்லூர், நந்திக்குண்டு, வரலொட்டி ஆகிய கிராமங்களில் கேந்திப்பூ சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது. இப்பூக்கள் இங்கிருந்து பல்வேறு நகரங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

தற்போது கேந்திப்பூ விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் காரியாபட்டி மார்க்கெட்டுக்கு இப்பூ வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது. சில வாரங்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.30-க்கு விற்ற கேந்திப்பூ தற்போது ரூ.10 விலை குறைந்து, ரூ.20-க்கு விற்பனையானது.

வரலொட்டியைச் சேர்ந்த விவசாயி செல்லப்பாண்டி கூறுகையில், விளைச்சல் அதிகரித்ததால் மகிழ்ச்சியில் இருந்தோம். ஆனால் விலை 3-ல் ஒரு பங்காக குறைந்தது கவலையளிக்கிறது. அருப்புக்கோட்டை பகுதியில் இருந்தும் மார்க்கெட்டுக்கு தொடர்ந்து கேந்திப்பூ வரத்து இருப்பதும் விலை சரிவுக்கு காரணம். பறிப்பு கூலிக்குக் கூட கட்டுப்படியாகாது என்பதால் பூக்களை செடியிலேயே விட்டு விட்டோம் என்றார்.

**ஆட்டுக்குட்டிகளில் ரத்தக்கழிச்சல் நோய்**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,00:00 IST



நவீன தொழில்நுட்பம்

**நோயின் அறிகுறிகள்:** வயிற்று வலியின் காரணமாக ஆட்டுக்குட்டிகள் அடிக்கடி முனங்கிக் கொண்டு முதுகை வளைத்து சாணம் போட முயற்சி செய்தல்

* குட்டிகளின் வாலைச் சுற்றி சிறிய பசை போன்ற சாணம் ஒட்டிக்கொண்டு காணப்படுதல்
* சாணம் நிறைய சளியுடன் கூடிய ரத்தமாக காணப்படுதல்
* தொடர்ந்து கழிச்சல் இருப்பதால் விரைவிலேயே நீர்ச்சத்து உடலில் இருந்து வெளியேறி சோர்வாக காணப்படுதல்
* ரத்த சோகையால் கண் மற்றும் வாய்ப்பகுதியில் உள்ள சவ்வு வெளிறிப் போய் காணப்படுதல்
* குட்டிகள் பசியின்மையால் சிறிது சிறிதாக பால் குடிப்பதை நிறுத்திவிடுதல்
* குட்டிகள் மிகவும் மெலிந்து எலும்பும் தோலுமாக காணப்படுதல்
* இளம் குட்டிகளின் வளர்ச்சி எதிர்பார்த்த அளவு இல்லாமல் இருத்தல்
* அழுக்கு நிறைந்த தோற்றத்துடன் காணப்படுதல்

**மருத்துவ முறை:** கழிச்சல் ஏற்பட்ட உடனேயே நோய் முற்றிய நிலையில் இருக்கும். எனவே உடனடி சிகிச்சை அவசியம் மேற்கொள்ள வேண்டும். கழிச்சல் கண்ட குட்டிகளை உடனே ஆரோக்கியமான குட்டிகளில் இருந்து பிரித்து தனியே அடைக்க வேண்டும். கழிச்சல் கண்ட குட்டிகளின் சாணத்தை எடுத்து அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தில் சாணத்தில் ரத்தக்கழிச்சலை ஏற்படுத்தக்கூடிய முட்டைகள் ஏதேனும் உள்ளதா என்று பரிசோதனை செய்ய வேண்டும். ரத்தக் கழிச்சலை ஏற்படுத்தக்கூடிய முட்டைகள் கண்டு அறியப்பட்டால் அந்த குட்டிகளுக்கு ஆம்புரோலியம் மற்றும் சல்பாடிமிடின் போன்ற மருந்துகளை கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் சரியான அளவு கொடுக்க வேண்டும். வயிற்றுப் போக்கால் ஏற்படும் உடல் நீர் இழப்பை ஈடுசெய்ய 0.9 சதவீதம் உப்புக்கரைசல் அல்லது 5 சதவீத குளூக்கோஸ் கரைசலை குட்டிகளுக்கு ஊசி மூலம் கொடுக்க வேண்டும். ரத்தசோகையை நீக்க ரத்த ஊக்கிகளான உயிர்ச்சத்து "பி' மற்றும் இரும்பு, தாமிரம் அடங்கிய தாதுக்கலவையை

கொடுக்க வேண்டும்.

**ரத்தக்கழிச்சல் வராமல் காக்க வேண்டிய பராமரிப்பு முறைகள்:** * குட்டிகளுக்கான கொட்டகை நீளவாக்கில் கிழக்கு மேற்காக இருக்க வேண்டும்.

* கொட்டகையின் தரைப்பகுதி சூரிய ஒளி படும்படி இருக்க வேண்டும்.

* குட்டிகள் பிறக்கும் 10 நாட்களுக்கு முன்னரே குட்டிகளை அடைக்கும் கொட்டகையின் தரைப்பகுதியை 4 அங்குல ஆழத்திற்கு சுரண்டி பழைய மண்ணை எடுத்துவிட்டு புதிய மண்ணாக சரளை அல்லது பெருமணலை பரப்பி சுண்ணாம்பு தூள் கொண்டு மண்ணை கிளறிவிட வேண்டும்.

* கொட்டகையின் சுவர்களை சுண்ணாம்பு கொண்டு வெள்ளை அடிக்க வேண்டும்.

* கொட்டகையின் உள்ளே இருக்கும் தண்ணீர் தொட்டிகளை கிருமிநாசினி கொண்டு சுத்தம செய்து வெள்ளை அடிக்க வேண்டும்.

* அதிக அளவு குட்டிகளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடைக்கக்கூடாது.

* தண்ணீர் மற்றும் தீவனத் தொட்டிகளை சிறிது உயரத்தில் தனித்தனியாக நல்ல இடைவெளி விட்டு வைக்க வேண்டும்.

* குட்டிகளுக்கு வழங்கும் தீவனம் அதிக ஈரப்பதத்துடன் இல்லாமல் சிறிது உலர்ந்ததாக இருக்க வேண்டும்.

* குட்டி ஈன்றவுடன் தாயின் மடியை நன்கு கழுவி பின் குட்டிகளை பால் குடிக்க அனுமதிக்க வேண்டும்.

* குட்டிகளை தாய் ஆட்டுடன் முதல் 3 நாட்களுக்கு மட்டுமே வைக்க வேண்டும். பிறகு காலை மற்றும் மாலை வேளைகளில் மட்டும் பால் குடிக்க அனுமதித்துவிட்டு குட்டிகளை தாயிடம் இருந்து பிரித்து தனியே அடைக்க வேண்டும். (தகவல்: ரா.தங்கதுரை, வீ.தவசியப்பன், வெ.பழனிச்சாமி, வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி-630 206. 04577-264 288)டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**விவசாயத்தை எதிர்நோக்கும் முக்கிய பிரச்னை**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,00:00 IST

பயிருக்கு தேவையான சத்துக்களில் முக்கியமானது தழைச்சத்து எனப்படும் நைட்ரஜனும், மணிச்சத்து எனப்படும் பாஸ்பரசும், சாம்பல் சத்து எனப்படும் பொட்டாஷ் சத்தும் ஆகும். உலக மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்றாற்போல் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு உரங்களின் தேவை இன்றியமையாதது ஆகும்.
ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் 17 மில்லியன் டன் மணிச்சத்து சார்ந்த உரங்களை

இடுகின்றனர். அது மட்டுமின்றி இதன் தேவை ஆண்டொன்றுக்கு 3 சதம் அதிகரிக்கிறது. தற்போது மற்றொரு அதிர்ச்சிகரமான செய்தி வர தொடங்கி உள்ளது. தற்போதைய நிலவரப் படி இன்னும் 30-40 ஆண்டுகள் வரைதான் விவசாய வளர்ச்சிக்கு இணையாக மணிச்சத்து சார்ந்த உரங்களை உற்பத்தி செய்ய முடியும். அது மட்டுமல்ல, தற்போது உற்பத்தியாகும் மணிச்சத்தில் 90% மொராக்கோ, சீனா, தென் அமெரிக்கா, ஜோர்டான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது. எண்ணெய் வளம் கூட 75% 12 நாடுகளிலிருந்து கிடைக்கிறது. ஆனால் மணிச்சத்தோ 5 நாடுகளிடம் மட்டுமே உள்ளது. தட்டுப்பாடு காலங்களில் சீனா மணிச்சத்துக்கான ஏற்றுமதி வரியை 135 சதம் உயர்த்தியது. அமெரிக்காவின் மணிச்சத்து சுரங்கங்கள் இன்னும் 20 வருடங்களில் வற்றிவிடும் அபாயநிலை உள்ளது. இதன் விளைவாக கடந்த 2003 முதல் 2006 வரை மணிச்சத்தின் விலை 350 சதம் உயர்ந்துள்ளது. 30 வருடங்களுக்குப் பிறகு மணிச்சத்தின் உற்பத்தி பெருமளவு குறைந்தால் மால்தூஸ் கூறியபடி பெரும் பஞ்சம் வரக்கூட வாய்ப்பு உள்ளது. இதற்கு தீர்வாக முழுமையான இயற்கை விவசாயத்தை நோக்கி சென்றாலும் வளரும் மக்கள் தொகைக்கு உணவளிப்பது கடினம்.

**இதற்கு தீர்வுதான் என்ன?**: 1. முடிந்த அளவு மணிச்சத்தை தற்போதிலிருந்தே சாணம் மற்றும் இயற்கை எருக்கள் (பசுந்தாள் உரம்) மூலம் இட தொடங்க வேண்டும்.

2. தேவையற்ற மணிச்சத்து உரத்தை அளிப்பதை தவிர்க்க வேண்டும். பயிருக்கு தேவையான அளவு மணிச்சத்தை தேவையான நேரத்தில் தேவையான முறையில் மட்டும் கொடுக்க வேண்டும். இதன் மூலம் மணிச்சத்து வீணாவதை குறைப்பதுடன் பயிரின் உற்பத்தி செலவை குறைத்து லாபத்தையும் பெருக்கலாம். மண் பரிசோதனை செய்வதன் மூலம் பயிருக்கு தேவையான மணிச்சத்தின் சரியான விகிதத்தை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

3. மண்ணில் அதிக அளவு மணிச்சத்து உள்ளது. ஆனால் அவை பயிரால் உபயோகப்படுத்த முடியாதபடி உள்ளது. ஒரு சில நுண்ணுயிர்கள் அமிலத்தை உற்பத்தி செய்து, மணிச்சத்தை கரைத்து பயிர்களின் வேர்கள் எடுக்கும் நிலைக்கு மாற்றிக் கொடுக்கும். இதன்மூலம் மணிச்சத்து உரத்தின் தேவையை குறைக்கலாம். இவ்வகை நுண்ணுயிரிகளை பாஸ்போ பாக்டீரியா என்று அழைக்கிறோம். ஆனால் இவை மண்ணில் இருக்கும் பயிர்களால் எடுக்க முடியாத மணிச்சத்தைதான் பயிருக்கு எடுக்க உதவும்.

4. மணிச்சத்து குறைந்த அளவு எடுத்து அதிக விளைச்சலை கொடுக்கும் ரகங்களை வேளாண் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க வேண்டும்.

5. மனித கழிவுகளில்தான் அதிக அளவு மணிச்சத்து உள்ளது. எனவே நகர்ப்புற மனித கழிவுகளிலிருந்து மணிச்சத்தை எடுக்கும் வழி வகையை கண்டுபிடிக்க வேண்டும்.

எண்ணெய் வளம் குறைந்தால்கூட அதற்கு மாற்று சக்தியாக சூரிய ஒளி, காற்று, அணு சக்தி என்று பல உள்ளது. ஆனால் மணிச்சத்து உரத்துக்கு மாற்று மேல் சொன்ன முறைகள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. வருங்கால சந்ததியரின் உணவுத்தேவை குறித்து இப்போதே

சிந்திப்பது நல்லது. இந்த பிரச்னையின் பரிமாணம் இன்னும் உலகுக்கு பெரிய அளவில் தெரியவில்லை. தொடர்புக்கு: எம்.அகமது கபீர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், தாராபுரம், திருப்பூர்-638 657.அகமது கபீர், பி.எஸ்சி (அக்ரி), எம்.பி.ஏ.,வேளாண்மை ஆலோசகர், தாராபுரம், 93607 48542.

**கோடை வருது! தென்னை மரங்கள் உஷார்!!**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,00:00 IST



ரோட்டவேட்டர் கருவியை பயன்படுத்தி, புல், பூண்டுகளை உழுதுவிடவும், ஆழமாக உழக்கூடாது. தென்னையின் வேர்கள் அறுபடக்கூடாது. தென்னை மர வேர்கள் தண்ணீர், உரம் தேடி 300 அடி நீளம் வரை செல்வதாக தமிழக வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அதனால் ஒரு விரல் அளவுள்ள வேர்கள் அறுபடாமல் மேலாக கீறி விடவும். ஆழம் உழக்கூடிய சட்டிகலப்பை, கல்டிவேட்டர்களை தென்னந்தோப்புகளில் பயன்படுத்தினால் வேர் அடுக்கு குலைந்துவிடும்.
தென்னை மரங்களிலிருந்து 5 அடி தள்ளி உழவும். தென்னை மர பக்கத்தில் உள்ள புற்களைக் கையால் எடுத்துவிடவும். மரத்தில் காயம் ஏற்படக்கூடாது. மரத்தில் காயம் ஏற்பட்டால் அந்த காயம் வழியாக சிவப்புக் கூன்வண்டு புகுந்து அதன் இனத்தைப் பெருக்கி மரத்தைத் தின்று கொன்றுவிடும். வரப்புகள் அமைத்து நீர்பாய்ச்சியும், சொட்டு நீர் குழாய்களை சரிசெய்து அடைப்பு நீக்கியும் பாதுகாக்கவும். மூன்று நான்கு வயதுடைய தென்னை மரங்கள் வளரும்

தோப்புகளில் மட்டைகள் சாய்வாக தொங்கி நிற்கும். உழவு ஓட்டும்போது அதை வெட்டக்கூடாது.
தென்னை மரங்களிலிருந்து மூன்றடி தள்ளி வேர்கள் அறுபடாமல் அரைவட்டம் எடுத்து தென்னைக்கு என்று தயாரிக்கப்படும் "கல்ப விருட்சா' மிக்சரை ஒரு கிலோ அளவில் கொடுக்கவும். மஞ்சள் கலர் இருந்தால் ஒரு கிலோ யூரியாவும் கொடுக்கவும். அதன்மேல் 30 கிலோ அளவு தொழு உரம் போட்டு தண்ணீர் கட்டவும். கழிவு மட்டைகளையும் பரப்பிவிடவும். ஈரம் அதிக நாட்கள் இருக்கும். தென்னை மரங்களில் பூக்கள் கருகி பிஞ்சுகள் உதிர்வது சத்துகள் பற்றாக்குறையினால் ஒரு புறம் இருந்தாலும் பூஞ்சாண எதிர்ப்புசக்தி குறைபாடும் ஒரு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.
உதிர்ந்து கிடக்கும் பிஞ்சுகளின் நெட்டிப்பகுதிகளை எடுத்துப் பார்த்தால் சாம்பல் நிறத்தில் படர்ந்து பூஞ்சாணம் வளர்ந்திருப்பது தெரியும். அது "கொச்சலியோ போல்லியோ' வகை பூஞ்சாணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதை தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்க "கோகோஸ்' உரமருந்தை மட்டை இடுக்குகளில் பயன்படுத்தவும். "கோகோஸ்' தாவர வகை பவுடர். அதில் உள்ள மருத்துவ குணத்தால் பூஞ்சாண வியாதி எதிர்ப்பு சக்தி உண்டா கிறது. அதில் உள்ள இயற்கையான சத்துக்கள் இலைவழி உணவாகி பாளைகள் 5 பங்கு பெரிதாகவும் மூன்று பங்கு அதிக நீளமாகவும் வருகிறது. மகசூல் 80% பெருகி குலை தேங்காய் கயிற்றால் தாங்கி கட்ட வேண்டும். திருவையாறில் அமைந்துள்ள தென்னை ஆராய்ச்சி மையம் செய்த பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. கடும் கோடை வரும் முன் பயிர் பாதுகாப்பு முறைகளை முறைப்படுத்தி செய்தால் தென்னை மகசூல் பெருகும்.
டாக்டர் வா.செ.செல்வம்,தென்னை ஆராய்ச்சியாளர்,திருவையாறு-613 204.போன்: 04362-260 363, 260 003.

**சீரான நிலையில் அரிசி விலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,01:27 IST

மதுரை:மதுரையில் கடந்த சில வாரங்களாகவே, அரிசி விலை ஏற்ற இறக்கமில்லாமல் ஒரே நிலையில் உள்ளது. இது குறித்து அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன்

கூறியாதவது:அறுவடை சீசன் என்பதாலும், வெளிமாவட்ட அரிசி வரத்து அதிகமாக இருப்பதாலும் அரிசி விலையில் மாற்றமில்லை. கடந்த வாரத்தைப் போலவே, நேற்றும் கர்நாடகா டீலக்ஸ் பொன்னி பழையது குவிண்டால் 3600ரூபாயாகவும், புதியது 2700ரூபாய், மதுரை டீலக்ஸ் பழையது 3000 ரூபாய், புதியது 2300ரூபாய், வெள்ளைப் பொன்னி பழையது 3500ரூபாய், புதியது 2700ரூபாய், செல்லப்பொன்னி பழையது 2300ரூபாய், புதியது 1900ரூபாய், ஐ.ஆர்.20 பழையது 2300ரூபாய், புதியது 2000 ரூபாய், ஐ.ஆர்.36 பழையது 2150 ரூபாய், புதியது 1800 ரூபாய், பச்சரிசி பழையது 3500ரூபாய், புதியது 2800ரூபாய், மாவு பச்சரிசி பழையது 2300 ரூபாய், புதியது 2000 ரூபாய், பிரியாணி அரிசி பழையது 5200ரூபாய், புதியது 4400 ரூபாயாக விற்கப்பட்டது என்றார்.

**பூ விலை மேலும் சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,01:27 IST

மதுரை:மதுரையில், வரத்து அதிகமாக இருப்பதால் கடந்த மூன்று வாரங்களாகவே, பூக்களின் விலை சரிவடைந்து வருகிறது. கடந்த வாரத்தில் மல்லிகை கிலோ 100 ரூபாயாக விற்கப்பட்டது. நேற்று கிலோ 60 ரூபாயாகவும், கனகாம்பரம் 250 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக குறைந்துள்ளது. இது குறித்து பூ மார்க்கெட் சங்க செயலாளர் ராமச்சந்திரன் கூறியதாவது: சுற்றுவட்டாரங்களில் இருந்து பூ வரத்து அதிகமாக உள்ளது. தேய்பிறை என்பதால், விற்பனை குறைந்து விட்டது. அடுத்து வரும் வாரங்களில் சித்திரை திருவிழா, வளர்பிறை முகூர்த்தம் உள்ளதால், பூ விலை கூடும் வாய்ப்பு உள்ளது. நேற்று பூ மார்க்கெட்டில், மல்லிகை கிலோ 60 ரூபாயாகவும், ரோஜா 30 ரூபாய், சம்பங்கி 40 ரூபாய், செவ்வந்தி 40 ரூபாய், கேந்தி பூ 20 ரூபாய், மரிக்கொழுந்து 25 ரூபாய், கோழிக்கொண்டை 30 ரூபாய், வாடமல்லி 30 ரூபாய், அரளிப்பூ 30ரூபாயாகவும் விற்கப்பட்டது என்றார்.

**ஸ்ரீவி.,யில் மழையால் செடியிலேயே அழுகும் தக்காளி: விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,00:12 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த இரு நாட்களாக பெய்த மழையால் செடியிலேயே தக்காளி அழுகியதால் விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்துள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூரில் நவம்பரில் மழையால் கிணறுகளிலும், கண்மாய்களிலும் ஓரளவு தண்ணீர்

வந்தது. இதை கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூர், பிள்ளையார்நத்தம், கம்பத்துப்பட்டி, மேல தொட்டியப்பட்டி, பூவாணி, நாச்சியார்பட்டி, பாட்டக்குளம், பாணான்குளம், வலையப்பட்டி உட்பட பகுதிகளில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில் விவசாயிகள் கடந்த டிசம்பர் மாதம் தக்காளி நடவு செய்தனர். தற்போது விளைந்து அறுவடை செய்யப்பட்டு வருகிறது.
இதன் விலை ஜனவரி, பிப்ரவரியில் கிலோவிற்கு 40 ரூபாய் வரை விற்கப்பட்டு வந்தது. இதனால் விவசாயிகள் நல்ல விலை கிடைக்கும் நினைத்து இருந்தனர். ஆனால் ஒரே நேரத்தில் விளைச்சல் அதிகரித்ததால் விலை குறைந்தது. ஒரு வாரம் முன் கிலோ 3 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில் கடந்த இருநாட்களுக்கு முன் பெய்த மழையால் செடிகளில் விளைந்த நிலையில் தக்காளிகள் அழுகின. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**ரூ. 6 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 30,2011,00:58 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நேற்று ஒரே நாளில் 7,000 வாழைத்தார்கள், ஆறு லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கதளி கிலோ 24 ரூபாய்க்கும், பச்சைநாடா தார் 140, செவ்வாழை 422, ரஸ்தாளி 200, பூவன் 315, மொந்தன் 250, தேன் வாழை 300, ரோபஸ்டோ 280 ரூபாய்க்கு விற்றது.
தேங்காய் 12 ஆயிரம் காய்கள் ஏலத்துக்கு வந்தன. அதிகபட்சமாக தேங்காய் ஒன்றுக்கு 10 ரூபாய், குறைந்தபட்சமாக 5.50 ரூபாய், சராசரியாக 7.40 ரூபாய்க்கு விற்றது. நடப்பு வாரம் 85 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் வர்த்தகம் நடந்தது.

**வெயிலுக்கு இதமாக வெள்ளரிபிஞ்சு**

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2011,22:42 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் பகுதிகளில் வெயில் சுட்டெரிக்கத் துவங்கியுள்ளது. மண்டையை பிளக்கும் வெயிலில் இருந்து தப்பிக்க, பெரும்பாலானோர் இளநீர், தர்பூசணி, வெள்ளரி பிஞ்சுகளை சாப்பிட்டு, ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றனர்.சீசன் துவங்கியுள்ளதை அடுத்து, வெள்ளகோவில் பகுதிகளில் வெள்ளரிபிஞ்சு வரத்து அதிகரித்துள்ளது. ஈரோடு, கொடுமுடி, வேலூர் பகுதிகளில் இருந்து மொத்தமாக வாங்கி வந்து, வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.வெள்ளகோவில், புது பஸ் ஸ்டாண்ட், கடை வீதி பிரிவு பகுதிகளில்

ஆங்காங்கே தள்ளுவண்டிகளில் விற்பனை செய்யப்படும் வெள்ளரி பிஞ்சுகளை வாங்க மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.விற்பனையாளர்கள் கூறியதாவது:கோடை வெயிலை சமாளிக்க மக்கள் இயற்கை பானங்களையே அதிகளவு விரும்புகின்றனர். சீசன் துவங்கியுள்ளதால், தற்போது வெள்ளரி வரத்து அதிகரித்துள்ளது. வெள்ளரியை துண்டு துண்டாக நறுக்கி உப்பு மிளகுபொடிதூவி சாப்பிடுவதையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். தர்பூசணியை பொறுத்தவரை, வியாபாரம் ஆகவில்லையென்றால் நீண்டநாள் வைத்திருக்க முடியாது. அதேபோல், அறுத்துபார்த்தால் தான் அதன் சுவை தெரியும்; இதனால் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால், வெள்ளரி பிஞ்சை பார்த்தே வாங்கிவிட முடியும். வெள்ளரி பிஞ்சு ஒன்று ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளரிபிஞ்சுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால், தற்போது விற்பனை சூடுபிடித்துள்ளது, என்றனர்.

## முந்திரி நெருக்கு நடவு விவசாயிகள் கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2011,22:10 IST

விருத்தாசலம் : விருத்தாசலத்தில் முந்திரி உற்பத்தி மேம்பாட்டிற்கு நெருக்கு நடவு முறையின் அவசியம் குறித்த கருத்தரங்கு நடந்தது. விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் முந்திரி உற்பத்தி மேம்பாட்டிற்கு நெருக்கு நடவு முறையின் அவசியம் குறித்த விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடந்தது. ஆராய்ச்சி நிலைய தலைவர் வைத்தியநாதன் தலைமை தாங்கினார். இணை பேராசிரியர்கள் அனீசாராணி, அம்பேத்கர் முன்னிலை வகித்தனர். பேராசிரியர் ஜீவா வரவேற்றார். தோட்டக்கலை துணை இயக்குனர் கனகசபை கையேட்டை வெளியிட்டு முந்திரி நெருக்கு நடவு முறை குறித்து பேசினார். விளைச்சலை பெருக்க நெருக்கு நடவு, கவாத்து முறை, பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. விவசாயிகள் பாரதி, செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**எதிர்வரும் வேளாண் பருவத்தில் பருத்தி உற்பத்தி 68 லட்சம் டன்னாக அதிகரிக்கும்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

**புதுடெல்லி**

பருத்தி விலை உயர்ந்து வருவதால், விவசாயிகள் அதிக அளவில் பருத்தியை பயிரிட்டு வருகின்றனர். இதனையடுத்து, எதிர்வரும் 2011–12–ஆம் வேளாண் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி 68 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நடப்பு பருவத்தில்...**

நடப்பு 2010–11–ஆம் பருவத்தில் பருத்தி உற்பத்தி சுமார் 59 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுடன் ஒப்பிடும்போது, வரும் பருவத்தில் உற்பத்தி 15.2 சதவீதம் அதிகரிக்க உள்ளது.

'சங்கர் 6' என்ற உயர் தர பருத்தியின் விலை சென்ற ஏழு மாதங்களில் இரண்டு

மடங்கு அதிகரித்துள்ளது. அதாவது, சென்ற 2010–ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் வரையிலான காலத்தில் ஒரு கேண்டீ (ஒரு கேண்டீ = 350 கிலோ) பருத்தி விலை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.

ஆக, நல்ல விலை கிடைப்பதால், பருத்தி பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருகிறது. நடப்பு 2010–11–ஆம் பருவத்தில் பரப்பளவு 8.25 சதவீதம் அதிகரித்து 1.10 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. எதிர்வரும் பருவத்தில் இது மேலும் அதிகரிக்கும் என வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவு 15 சதவீதம் உயரும் என இந்திய பருத்தி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் திரேன் சேத் தெரிவித்துள்ளார்.

**பயன்பாடு**

நடப்பு 2010–11 பருத்தி பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தி 2.49 கோடி டன்னாக உயரும் என இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய முன்பேர வர்த்தக சந்தை நிறுவனமான என்.சி.டீ.இ.எக்ஸ். தெரிவித்துள்ளது. உலக அளவில் பருத்தி பயன்பாடு 2.47 கோடி டன்னாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

## மார்ச்சுடன் நிறைவடையும் நிதி ஆண்டில் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 19% வளர்ச்சி அடையும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டு நிறைடைய இன்னும் ஒரு தினமே உள்ளது. இவ்வாண்டில் நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 19 சதவீதம் உயர்ந்து 240–250 கோடி டாலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அமெரிக்கா–ஐரோப்பா**

இது, கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் 210 கோடி டாலராக (சுமார் ரூ.10,048 கோடி) இருந்தது. அவ்வாண்டில் 6.78 லட்சம் டன் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாகி உள்ளன. மேலும், அளவு, டாலர் மதிப்பு மற்றும் ரூபாய் மதிப்பு ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஏற்றுமதி முந்தைய அனைத்து சாதனைகளையும் முறியடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டிலிருந்து கடல் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் அமெரிக்கா முதலிடத்திலும், ஐரோப்பிய நாடுகள் இரண்டாவது இடத்திலும் உள்ளன. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இந்தியாவின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில் ஜப்பான் நாட்டின் பங்களிப்பு 15 சதவீதமாக இருந்தது. மேலும் அமெரிக்கா, ஐரோப்பாவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இருந்தது.

அண்மையில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியால் ஜப்பானில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. அங்கு அணு உலைகள் வெடித்து சிதறியதால் கதிர்வீச்சு அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அந்நாட்டின் வடகிழக்கு கடற்கரையில் அதிக இடர்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் ஜப்பான் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. அடுத்த ஆறு மாதங்களுக்கு அந்நாட்டுக்கான இந்தியாவின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. டோக்கியோ, ஒசாகா ஆகிய இரண்டு நகரங்கள் தவிர மற்ற அனைத்து நகரங்களிலுமே அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**ஒன்பது மாதங்களில்...**

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) நாட்டின் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், சென்ற நிதி ஆண்டின் இதே

காலத்தைக் காட்டிலும் 6.6 சதவீதம் அதிகரித்து 5.13 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. டாலர் மதிப்பில் இது சுமார் 203 கோடி டாலராக உள்ளது. இது நடப்பு நிதி ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மொத்த இலக்கில் (250 கோடி டாலர்) 81 சதவீமாகும்.

## முட்டைகோஸ் விவசாயத்தில் கவனம் செலுத்தும் ஓவேலி விவசாயிகள்



கூடலூர் ஓவேலி பகுதியில் முட்டைகோஸ் விவசாயம் களைகட்டி உள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர், மார்ச்.30–

முட்டைகோஸ் பயிரிடு வதில் கூடலூர் ஓவேலி விவசாயிகள் கவனம் செலுத்த தொடங்கி உள்ளனர். இதனால் முட்டைகோஸ் விளைச் சல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வாசனை பயிர்கள் விளைச்சல்**

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலைப் பிரதேச காய்கறிகள் விளைவிக் கப்படுகின்றன. ஊட்டி பகுதி யில் கேரட், உருளைக்கிழங்கு, மேரக்காய், காளிபிளவர், முட்டைகோஸ் உள்ளிட்ட

பயிர்கள் விளைகின்றன. இதேபோல் கூடலூர் அருகே உள்ள நடுவட்டம் பகுதியிலும் மலைப்பிரதேச காய்கறிகள் விளைகின்றன.

ஆனால் கூடலூர் பகுதியில் மலைப்பிரதேச காய்கறிகளை விட சமவெளி பிரதேச காய் கறிகள் அதிகளவு விளைவிக் கப்படுகின்றன. மேலும் கூட லூர் ஓவேலி பகுதியில் தேயி லைக்கு இணையாக இஞ்சி, கிராம்பு, ஏலக்காய், இலவங்க பட்டை என வாசனை பயிர் கள் நூற்றுக்கணக்கான ஏக்க ரில் விளைவிக்கப்படுகின்றன.

**முட்டைகோசில் கவனம் செலுத்தும் விவசாயிகள்**

தனியார் தோட்ட நிறுவ னங்கள் வாசனை பயிர்களை விளைவிப்பதில் ஆண்டாண்டு காலமாக ஈடுபட்டு வருகின் றன. இதனால் ஓவேலி பகுதி யில் உள்ள சிறு விவசாயிகள் தேயிலை, இஞ்சி, குறுமிளகு, பீன்ஸ் உள்ளிட்ட பயிர்களை பயிரிட்டு பயன்பெற்று வரு கின்றனர். தற்போது ஓவேலி சூண்டி, மரப்பாலம் பகுதி களில் முட்டை கோஸ் பயிரிட் டுள்ளனர்.

வழக்கமாக நடுவட்டம் பகுதி வரை மலைப்பிரதேச காய்கறிகள் விளைவிக்கப்பட்டு வந்த நிலையில் கூடலூர் பகுதியில் முட்டைகோஸ் பயிரிடுவதில் சில விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தனர். அதன்பிறகு முட்டைக்கோஸ் பயிரிடுவதை விவசாயிகள் பெருமளவு குறைத்து கொண் டனர். ஆனால் தற்போது கூட லூர் ஓவேலி விவசாயிகள் முட்டைகோஸ் விவசாயத்தில் அதிக ஆர்வமும், கவனமும் செலுத்தி வருகின்றனர். இத னால் வரும் காலங்களில் முட் டைகோஸ் விளைச்சல் கூடலூர் பகுதியில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**
வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,750–2,770

**மணிலா பயறு**
80கிலோ கொண்ட மூட்டை 3,400–3,450

**கடலை எண்ணெய்**
ஒரு குவிண்டால் (வரி உள்பட) 7,450–00

**கடலை புண்ணாக்கு**
70 கிலோ மூட்டை (சாக்கு வரிஉள்பட) 1,425–00

**தேங்காய் எண்ணெய்**
15 கிலோ கிராம் கொண்ட டின் (வரிஉள்பட) 1,780–00

**நல்லெண்ணெய்**
குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500–00
டின் (15கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**
ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 11,200.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700–00

**சூரியகாந்தி எண்ணெய்**
சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ டின் (வரிஉள்பட) 1,135.00

**ரீபைண்டு ஆயில்**
(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,310.00

**வனஸ்பதி**
டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,090.00

**பாமாயில்**
10 கிலோ டின் (வரி தனி) 550–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மார்ச்.29–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,500 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மார்ச்.29–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 12,513
2. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,877
3. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 1,609
4. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 17,378
5. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 17,153
6. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,918

## கோவை உழவர் சந்தை

கோவை,மார்ச்.29–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 64–00 | காலிப்பிளவர் | ரூ. | 14–16 |
| கத்தரிக்காய் | ரூ. | 12–14 | பொறியல் தட்டை | ரூ. | 14–16 |
| வெண்டைக்காய் | ரூ. | 9–10 | பச்சை மொச்சை | ரூ. | 28–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 4–5 | தேங்காய் | ரூ. | 12–13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6–7 | பட்டாணி | ரூ. | 36–40 |
| புடலை | ரூ. | 8–9 | பூண்டு | ரூ. | 120–130 |
| பீர்க்கான்காய் | ரூ. | 16–18 | கறிவேப்பிலை | ரூ. | 32–00 |
| சுரைக்காய் | ரூ. | 9–10 | அகத்தி | ரூ. | 14–00 |
| பாகற்காய் | ரூ. | 13–14 | வாழைக்காய் | ரூ. | 14–00 |
| கொத்தவரை | ரூ. | 12–14 | திராட்சை | ரூ. | 40–00 |
| பூசணிக்காய் | ரூ. | 14–16 | திராட்சை (பச்சை) | ரூ. | 66–70 |
| அரசாணிக்காய் | ரூ. | 9–10 | குடைமிளகாய் | ரூ. | 30–00 |
| மேராக்காய் | ரூ. | 18–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 16–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 30–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 18–00 | கறிபீன்ஸ் | ரூ. | 18–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 17–18 | புஸ்பீன்ஸ் | ரூ. | 20–24 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10–00 | காளான் | ரூ. | 80–140 |
| இஞ்சி | ரூ. | 32–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| முருங்கைக்காய் | ரூ. | 24–00 | மாங்காய் | ரூ. | 28–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 14–16 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15–16 |
| சேனைகிழங்கு | ரூ. | 19–00 | கொய்யா1கிலோ | ரூ. | 24–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 170–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 16–17 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | மாம்பழம் | ரூ. | 50–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | ஆப்பிள் | ரூ. | 115–00 |
| முள்ளங்கி | ரூ. | 10–00 | சாத்துக்குடி | ரூ. | 30–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 22–23 | நெல்லிக்காய் | ரூ. | 45–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 18–19 | ஆரஞ்சு | ரூ. | 45–00 |
| நூல்கோல் | ரூ. | 12–16 | வெள்ளரி | ரூ. | 12–26 |
| கொத்தமல்லி | ரூ. | 20–22 | புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | அவரை | ரூ. | 12–18 |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| புதினா | ரூ. | 16–00 | மக்காச்சோளம் | ரூ. | 3.50–00 |
| | | | தர்பூசணி | ரூ. | 10–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21800 |
| மிளகு (சேட்டன்) | ரூ.22200 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22750 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 6000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 5000 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9450 |
| கொப்பரை நாடன் | ரூ.6375 |
| கொப்பரை ராசு | ரூ.6275 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6285 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.6250 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6700 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21800 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22300 |
| ரப்பர் பால் | ரூ. 18300 |
| காப்பி | ரூ. 9700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5300 |
| நேந்திரகாய் | ரூ. 1300 |
| இஞ்சி | ரூ. 1650 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,மார்ச்.29–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1150 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1520 | 1020.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,750 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,000 | 59.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,200 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,255 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,040 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,040 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.400.00 | ரூ. 500.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 1.50 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.8.00 | ரூ.17.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.3.00 | ரூ.5.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.7.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.8.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.12.00 | ரூ.15.00 |
| மேராக்காய் | ரூ.8.00 | ரூ.10.00 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.192.00 | அதிகபட்சவிலை | ரூ.264.00 |
| சராசரி விலை | ரூ.169.11 | சராசரி விலை | ரூ.240.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.150.00 | குறைந்தபட்சவிலை | ரூ.200.00 |

**பட்டு நூல் ரூ.1,844**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,464.00 | 15424.00 | 15480.00 |
| ஒரு கிராம் | 1,933.00 | 1,928.00 | 1,935.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 55,545.00 | 59,100.00 | 60,000.00 |
| ஒரு கிராம் | 59.45 | 58.75 | 59.50 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**
தனிவிரலி ரூ.7816–9706
தனிகிழங்கு ரூ.7616–9054

**தேங்காய்**
திருப்பூர் ரூ.700–900
தொண்டாமுத்தூர் ரூ.600–700

**பருத்தி**
(அன்னூர்) டி.சி.எச் ரூ.8000–8300